# தமிழ் மஞ்சரி

(2024-2025ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்




முனைவர் த.கீதாஞ்சலி

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

பொள்ளாச்சி - 642 001

Dr. A. MAHABOBU

# தமிழ் மஞ்சரி

(2024 - 2025 ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்


முனைவர் த.கீதாஞ்சலி

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

பொள்ளாச்சி - 642 001



நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை- 600 050.

☎: 044 - 26251968, 26258410

# பொருளடக்கம்

## I. செய்யுள் பகுதி


1. கலிங்கத்துப்பரணி - இராச பாரம்பரியம்
   - ஜெயங்கொண்டார் 11
2. அழகர் கிள்ளைவிடு தூது
   - பலபட்டடை சொக்கநாதபிள்ளை 16
3. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்
   - குமரகுருபரர் 19
4. அபிராமி அந்தாதி
   - அபிராமி பட்டர் 22
5. தேவாரம் - ஆறாம் திருமுறை - திருமறைக்காடு
   - திருநாவுக்கரசர் 24
6. நாலாயிர திவ்யப் பிரபந்தம் - முதல் திருமொழி
   - பெரியாழ்வார் 27
7. தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி 29
8. நந்திக் கலம்பம் 32


## II. உரைநடை


1. தீயினை நயந்தான் - அ.ச.ஞானசம்பந்தன் 35
2. புறநானூற்றில் பொதுவியல் திணை - முனைவர் அ.மகபுபூ 42
3. பதினெண்கீழ்க்கணக்கு காட்டும் அறிவியல் - முனைவர் ம.சித்ரகலா 50
4. ஆய்வு நோக்கில் சூளாமணி - முனைவர் க.தனலட்சுமி 56
5. ‘எழுத்து’ புதுக்கவிதையின் வெற்றிக்கொடி - சிற்பி பாலசுப்பிரமணியம் 60
6. தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு விழாக்கள் - முனைவர் ந.ஜெயசுதா 68
7. தமிழில் கல்வெட்டியல் - முனைவர் ந.பிரகாஷ் 73
8. வைணவச் சிந்தனைகளில் திருமங்கையாழ்வார் - பேரா.ரா.சூர்யா 79


## III. இலக்கணம்


சொற்றொடர்

1. தொகை நிலைத்தொடர் 86
2. தொகா நிலைத் தொடர் 90

# 2. புறநானூற்றில் பொதுவியல் திணை

- முனைவர் அ.மகபூ

தமிழ் இலக்கியத்தில் திணை என்ற சொல் 'பொருள்' என்பதைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. மனித வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்வுகளை அகம், புறம் என்று பிரிப்பது தமிழ் இலக்கிய மரபு. களவொழுக்கத்திலும் இல்லற வாழ்க்கையிலும் தலைவனும் தலைவியும் அனுபவிக்கும் இன்பமும் துன்பமும் பற்றிய செய்திகள் வெளிப்படையாகப் பிறரிடம் பகிர்ந்து கொள்ள முடியாதவையாகையால் அவை அகப்பொருள் எனப்படும். அகப்பொருளைப் பற்றிப் பாடும் பாடல்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை பெருந்திணை ஆகிய ஏழு அகத்திணைகளில் அடங்கும்.

காதலைத் தவிர வாழ்க்கையின் மற்ற கூறுபாடுகள் புறப்பொருள் எனப்படும். போர், வீரம், வெற்றி, புகழ், கொடை, நிலையாமை முதலிய பொருட்களை மையமாகக்கொண்ட பாடல்கள் புறத்திணைகளில் அடங்கும். புறத்திணைகளுள் வெட்சி கரந்தைத் திணைகள் பசுக்களைக் கவர்தல், அவற்றை மீட்டல் எனவும் வஞ்சி காஞ்சித் திணைகள் பகைவர் நாட்டின்மேல் படையெடுத்தல், அவர்களை நாட்டுள் விடாமல் தடுத்தல் எனவும் உழிஞை, நொச்சித்திணைகள் மதிலை வளைத்தல், அதைக் காத்தல் என அமைந்து எதிர் எதிர் திணைகளாக அமைந்திருத்தல், சிறப்புடையது. அடுத்துக் கூறப்படும் தும்பைப் போர்முறை இடம், நாள், நேரம் குறித்துச் செய்யப்படும் அறப்போராக வீரம் விளைய நின்றது என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றியைப் பாராட்டுதல் வாகை என்பதோடு அமையாமல் தோற்றவர் பக்கத்தும் வீரம் வெளிப்பட போர் செய்தவர்களையும் சிறப்பித்து பொதுவான வீரம், கொடை இவற்றைப் பேசும் பாடாண் திணை, தமிழர் நாகரிகத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

புறநானூற்றில் உள்ள பாடல்கள் பதினொரு புறத்திணைகளைச் சார்ந்தவையாக உள்ளன. எல்லாத் திணைகளுக்கும் பொதுவான கருத்துகளைத் தொகுத்துக் கூறும் திணை பொதுவியல் எனப்படும். திணை என்னும் பெரும்பிரிவின் உட்பிரிவுகள் துறைகள் எனப்படும். பொதுவியல் என்னும் திணையின் உட்பிரிவுகளுள் பொருண்மொழிக் காஞ்சி என்னும் துறையும் ஒன்று. இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயக்கும் செய்திகளைக் கூறும் பாடல்கள் பொருண்மொழிக் காஞ்சித் துறையில் அடங்கும். புறநானூற்றில் பதினேழு பாடல்கள் பொருண்மொழிக் காஞ்சித்துறையைச் சார்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இப்பாடல்களில் மக்களுக்கேற்ற அறிவுரைகளும் மன்னர்களுக்கேற்ற அறிவுரைகளும் காணப் படுகின்றன. அவற்றைக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

### மக்களுக்கான அறிவுரைகள்

"புறப்பொருளாவது மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான் ஆயப்பயன் பிறர்க்குப் புலனாதலின் புறம்" என்ற இளம்பூரணரின் புறப்பொருள்

விளக்கப்படி, புறநானூற்றில் மறக்கருத்துகளும் அறக்கருத்துகளும் நிறைந்துள்ளன. அவற்றில் மக்களுக்கான அறவுரைகள் பல உள்ளன அவைகளாவன,

**மக்கள் நல்லவற்றை செய்தல் வேண்டும்**

நல்லது செய்வது உயர்ந்த குணம் அதைச்செய்ய முடியாவிட்டாலும் தீமை செய்யாமலாவது இருக்கவேண்டும் என்பதை, பலவான குணங்களைக் கொண்டவர்களே! பலவான குணங்களைக் கொண்டவர்களே! கயல்முள் போன்ற நரைமுடி பெற்ற முதுமையை அடைவீர்கள். அப்பொழுது உங்கள் உயிரைப் பறித்துக்கொண்டு எமன் செல்லும் பொழுது புலம்புவதில் பயன் எதுவுமில்லை. எனவே அதற்குமுன் பிறருக்கு உதவிசெய்யவில்லை என்றாலும் மற்றவர்க்கு தொல்லை செய்யாமலாவது இருக்க வேண்டும் என்பதை அனைவரும் விரும்புகின்ற இனிய தன்மை. அதுமட்டுமல்லாமல் அதுவே நன்மை பயக்கும் உயர்ந்த உன்னதமான பாதையாகும் என்கிறார் நரிவெரூஉத்தலையார்,

**"பல்சான் றீரே பல்சான் றீரே**
**கயல்முள் அன்ன நரைமுதிர் திரைக்கவுள்**
........................................................
**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே!"** **(புறம்- பாடல் 195)**

இக்கருத்தைப் பின்பற்றுவதன் மூலம் தாமும் பிறரும் நன்மை பெறலாம் என்பதை வலியுறுத்துகிறார்.

**உலகமெல்லாம் ஊரே**

இந்த உலகம் அனைவருக்கும் உரிமையானது, இங்கு வாழும் அனைவரும் சமமானவர்கள், நன்மையும் தீமையும் நம்மால் ஏற்படுவதல்லாமல் பிறரால் ஏற்படுவதில்லை. இறப்பு புதிதல்ல, நம்மைத் தொடர்ந்தே இருப்பது. எல்லா நாட்களும் இனிமையும் அன்று. தீமையும் அன்று. மின்னல்மின்னி, இடிஇடித்து பெருமழைக்கொட்டி, நீர் அருவி ஆறாய் ஓடும். அதில் மிதக்கும் மிதவைப் போன்றது மனிதவாழ்வு. அது விதிப்படி செல்லும், பெரியவரைக்கண்டு அதிசயப்பதுமில்லை, சிறியவரை இகழ்வதுமில்லை என்ற மிகப்பெரிய உன்னதமான உண்மையை உலகிற்கு எடுத்துரைத்தவர் கணியன் பூங்குன்றனார்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன**
**சாதலும் புதுவ தன்றே வாழ்தல்**
**இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்**
........................................................
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"** **(புறம் -192)**

இப்பாடலை பின்பற்றினால் யாரையும் யாரும் ஒரு குறைகூட சொல்ல மாட்டார்கள். அவரது பரந்த மனப்பான்மைக்கும் தெளிவான சிந்தனைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கி, நம்மை சிந்திக்க வைக்கிறது.

### நல்ல ஆண்மக்கள் எவ்வழி மக்கள் அவ்வழி

நாடாகவோ, இல்லை காடாகவோ, தாழ்ந்த பள்ளமாகவோ, உயர்ந்த மேடாகவோ எதுவாக இருந்தால் என்ன? எங்கே நல்ல ஆண் மக்கள் வாழ்கிறார்களோ அங்கே நாடும் செழிப்பாக இருக்கும் என்கிறார் ஔவையார்.

> "நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ
> அவலாக ஒன்றோ மிசையாக ஒன்றோ
> எவ்வழி நல்லவர் ஆடவர்,
> அவ்வழி நல்லை வாழிய நிலனே"

(புறம் - பாடல் 18

ஒரு நாட்டின் பெருமை, அந்நாட்டு மக்களைப் பொறுத்தது என்ற உண்மை நமக்கு உணர்த்துகிறது.

### இல்லற வாழ்வே இனிது

துன்பங்களால் வாடுங் காலத்து இல்வாழ்க்கையிலிருந்து தப்பியோட விழைந்தாலும், மனைவி, மக்கள் போன்ற சுற்றத்தாரோடு கூடிய இல்வாழ்க்கை அதற்குத் தடையாக இருப்பதாக ஓரேருழவர் கூறுவது,

> "அதள் எறிந்தன்ன நெடுவெண் களரின்
> ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
> ஓடி உய்தலும் கூடும்மன்
> ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே

(புறம்-பாடல்-19

இல்வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது என்ற கசப்பான உண்மை உரைக்கிறது.

### நல்வினையின் பயன்

தெளிந்த அறிவற்றவர்கள்தான் நற்செயல்களைச் செய்யலாமா வேண்டாமா என்ற ஐயம் நீங்காதவர்களாக இருப்பார்கள். நல்வினை செய்தவர்களுக்கு விண்ணுலக இன்பம் கிடைக்கலாம். அல்லது, மீண்டும் பிறவாமல் இருக்கு நிலையைப் (வீடு பேறு) பெறலாம். பிறவாமை என்ற நிலை இல்லை என்றாலு இவ்வுலகிலே உயர்ந்த புகழை நிலைநாட்டி. குறையற்ற உடலோடு இறப்பு மிகப்பெருமை வாய்ந்தது. ஆகவே, தயக்கமின்றி நல்வினைகளைச் செய் வேண்டும் என்கிறார் கோப்பெருஞ்சோழன்,

> "செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
> ஐயம் அறாஅர் கசடுஈண்டு காட்சி
> நீங்கா நெஞ்சத்துத் துணிவு இல்லோரே
> யானை வேட்டுவன் யானையும் பெறுமே
> குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே"

(புறம் - 2

எனக் கூறியிருப்பது நல்வினைகளைச் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

**இவ்வுலக இயக்கம்**

இந்த உலகம் ஏன் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று சிந்தித்த பாண்டிய மன்னன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, இந்த உலகிற்கரிய அமிழ்தமே ஆனாலும் தாமே உண்பதுமில்லை, எதையும் வெறுப்பதுமில்லை, பிறர் அஞ்சுவதற்கு அஞ்சுபவருமில்லை. புகழ் எனின் உயிரையும் கொடுப்பர் பழி எனில் உலகத்தைக் கொடுத்தாலும் கொள்ளார். மனக்கவலை கொள்ளார். இத்தகைய சிறந்த மாண்புகளைக் கொண்டவர்கள் நம்முன்னோர்கள். மனித நேயத்தோடு 'தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர்' உள்ளதால்தான் இவ்வுலகம் நிலைபெற்று இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை

**"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும் இனிதுஎனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவிலர்**
**துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழ்எனில் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்வுஇலர்**
**அன்ன மாட்சி அனைய ராகித்**
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"**

(புறம் பாடல்-182)

என்ற உயர்ந்த கருத்தைக் கூறுகிறது. திருக்குறளில் விருந்தோம்பல், அன்புடைமை, வெகுளாமை, அறிவுடைமை, மடியின்மை, தீவினையச்சம், ஊக்கமுடைமை, புகழ், ஈகை, ஒப்புரவு, பண்புடைமை ஆகிய அதிகாரங்களின் மையக்கருத்துகளை இச்சிறிய பாடலில் காணலாம்.

**எலியும் புலியும் போன்ற நட்பு**

எலி போல் சுரண்டிப் பிழைப்போர் நட்பு வேண்டாம். புலி போல் உழைத்துப் பிழைப்போர் நட்பு வேண்டும் என்று சோழன் நல்லுருத்திரன் கூறியிருப்பதை,

**"விளைபதச் சீறிடம் நோக்கி விளைகதிர்**
**வல்சி கொண்டுஅளை மல்க வைக்கும்**
**எலிமுயன் றனையர் ஆகி உள்ளதம்**
**வளன்வலி உறுக்கும் உளம் இலாளரொடு**
**இயைந்த கேண்மை இல்லாகி யரோ**
**...........................................**
**புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து**
**உரன் உடையாளர் கேண்மையொடு**
**இயைந்த வைகல் உள வாகியரோ"**

(புறம் பாடல் 190)

மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**செல்வத்துப் பயனே ஈதல்**

வேந்தனாக இருந்தாலும் வேடனாக இருந்தாலும் உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகள் எல்லோருக்கும் ஒன்றுதான். தேவைகளுக்கு மீறிய செல்வம் இருந்தால் அதைப் பயன்படுத்த முடியாது என்பதை,

"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல் துய்ப்பேம்
எனினே தப்புந பலவே"

(புறம் -பாடல்-18

ஆகவே, "செல்வத்துப் பயனே ஈதல்" என்று மதுரைக் கணக்காயனார் மகனா நக்கீரனார் ஈகையை வலியுறுத்துகிறார்.

## குழந்தைச் செல்வம்

குழந்தை இல்லாத வாழ்க்கை நிறைவு பெறாத வாழ்க்கை என்று பாண்டியன் அறிவுடை நம்பி மக்கட்பேற்றால் வரும் இன்பத்தைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறா

"படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெரும் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி - இட்டும்
தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே"

(புறம் -18

திருக்குறளில் மக்கட்பேறு என்ற ஓர் அதிகாரம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## மூவாத இளமை

"யாண்டு பலவாக நரையில ஆகுதல் யாங்கு ஆகியர்?" என்று கேட்டவர்களுக்கு "சிறப்பான என் மனைவியோடு, என்னுடைய மக்களும் அறிவு நிரம்ப பெற்றவர்கள். என்னிடம் பணிபுரிபவர்களும், என் நாட்டை ஆளும் வேந்தனு சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். நான் வாழும் ஊரில், மாட்சிமைக்குரி நற்குணங்களும் நல்லொழுக்கங்களும் நிறைந்த சான்றோர்கள் பலர் உள்ளனர் என்கிறார் பிசிராந்தையார்.

"யாண்டுபல வாக நரையில ஆகுதல்
யாங்காகியர் என வினவுதிர் ஆயின்,
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையார்என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"

(புறம்-19

இவ்வாறாக தன் இளமை குன்றாத தோற்றத்திற்கு விளக்கம் அளிக்கிறார்.

**கல்விப்பேறு**

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்று பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் பாடல் கூறுகிறது. ஒருவயிற்றில் பிறந்தவராக இருப்பினும் கல்வியின் சிறப்பால் தாயின் மனமும் வேறுபடும். அறிவுடையவன் பக்கம் அரசும் செல்லும். நான்வகைப் பிரிவினில் கீழ்ப்பிரிவினைச் சார்ந்தவன் ஒருவன் கல்வியில் வல்லவன் ஆனால் மேற்பிரிவைச் சார்ந்தவர்களும் அவனிடம் கல்வி கற்பார்கள் என்பதை,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
..............................................
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே" (புறம். 183)

என்று கல்வியின் இன்றியமையாமையை மக்களுக்கு எடுத்துரைக்கிறது.

**அரசர்களுக்கான அறவுரைகள்**

அரசர்கள் மக்களுக்கு உயிரைப் போன்றவர்கள். அவர்களின் கடமைகள் என்ன என்பதை உணர்த்தும் அறவுரைகளாவன.

**மன்னனின் கடமைகள்**

நெல்லும் உயிரன்று. நீரும் உயிரன்று. மன்னனே பரந்தவுலகிற்கு உயிரைப் போன்றவன். எனவே அவனின் கடமை அறிந்து செங்கோல் ஆட்சியான நல்ல ஆட்சியினைப் புரியவேண்டும் என்கிறார் மோசிகீரனார்.

"நெல்லும் உயிரன்றே நீரு முயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்த்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே" (புறம் - 186)

"ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு" (குறள் 740)

என்று வள்ளுவர் கூறுவதையும் இப்பாடல் வலியுறுத்துகிறது.

**ஆட்சி புரிபவர்களின் ஆற்றல்**

'ஆட்சி புரிபவர்கள் ஆற்றல் உடையவர்களாக இருந்தால் நாடு நலம் பெறும் அவர்கள் ஆற்றல் அற்றவர்களாக இருந்தால் பலவகையான துன்பங்கள் வந்து சேரும்' என்று கூறும் தொண்டைமான் இளந்திரையனின் பாடல் மன்னராட்சிக்கும் மக்களாட்சிக்கும் ஏற்ற கருத்து.

"கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறுஇன்று ஆகி ஆறுஇனிது படும்
உய்த்தல் தேற்றான் ஆயின் வைகலும்
பகைக்கூழ் அள்ளற் பட்டு
மிகப்பல தீநோய் தலைத்தலைத் தருமே" (புறம் 185)

### மன்னனுக்குப் புலவர் கூறும் அறிவுரை

அருளையும் அன்பையும் நீக்கி வாழ்பவரோடு சேராது, நாட்டு மக்களை குழந்தைகளைக் காக்கும் தாயைப் போலப் பாதுகாக்கவேண்டும் என் நரிவெரூஉத்தலையார் சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேர இரும்பொறைக்குக் கூறும் அறிவுரை

**"எருமை அன்ன கருங்கல் இடைதோறு**
**ஆனிற் பரக்கும் யானைய முன்பின்**
**கானக நாடனை! நீயோ, பெரும**
**நீயோர் ஆகலின் நின்ஒன்று மொழிவல்**
**அருளும் அன்பும் நீக்கி நீங்க"**

(பாடல் -

இவ்வறிவுரை நாடாள்பவர் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

### மன்னன் வரிசை அறிந்து கொடுக்கவேண்டும்

ஒரு சமயம், மலையமான் திருமுடிக்காரி எல்லாப் புலவர்களுக்கும் சிறப்பு செய்வதைப் போலவே தனக்கும் சிறப்புச் செய்வதைக் கண்ட கபிலர், புலவரி தகுதி அறிந்து சிறப்புச் செய்தல் வேண்டும் என்று காரிக்குக் கூறும் அறிவுரை,

**"ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்**
**பலரும் வருவர் பரிசில் மாக்கள்**
**வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்**
**ஈதல் எளிதே மாவண் தோன்றல்**
**அதுநற்கு அறிந்தனை ஆயின்**
**பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே"**

(புறம் - 12

**"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்**
**அதுநோக்கி வாழ்வார் பலர்"**

(குறள் - 528)

என்ற குறளோடு ஒத்திருப்பதைக் காணமுடிகிறது.

### மன்னன் புகழோடு வாழ்தல்

போர் புரிவதைத் தவிர்த்து, வீரர்களும் பரிசிலரும் உன்னை வாழ்த்த, மகளி தரும் மதுவை அருந்தி, மகிழ்ச்சியோடு சிறந்து வாழ்வாயாக! அதுவே சிறந் வாழ்க்கை. உலகத்தில் தோன்றிப் புகழ் பெருக வாழாமல் இருப்பவர்கள் இறந்தவ களாகவே கருதப்படுவார்கள்." என்று மாங்குடி கிழார் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் கூறும் அறிவுரையைப் போரை விரும்பு ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும் என்ற வகையில் அமைந்தது.

**"நெல் அரியும் இருந் தொழுவர்**
**செஞ்ஞாயிற்று வெயில் முனையின்**
**...................................................**
**ஒண்டொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
**தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து**

**ஆங்குஇனிது ஒழுகுமதி பெரும! ஆங்கது**
**வல்லுநர் வாழ்ந்தோர் என்ப தொல்லிசை**
**மலர்தலை உலகத்துத் தோன்றிப்**
**பலர்செலச் செல்லாது நின்று விளிந்தோரே''** (புறம் - 24)

## ஆட்சிக்குத் தகுதியான மன்னன்

"தகுதியற்றவன் ஆட்சிக்கு வந்து மக்களிடம் அதிகமாக வரி கேட்டு அவர்களைத் துன்புறுத்தி ஆட்சி செய்வது அரசனுக்கு மட்டுமல்லாமல் குடிமக்களுக்கும் பெருஞ்சுமையாக இருக்கும். ஆனால், தகுதி உடையவன் ஆட்சிக்கு வந்தால், அவ்வாட்சி அவனுக்கும் அவன் குடிமக்களுக்கும் சுமை இல்லாததாக இருக்கும்." என்று சோழன் நலங்கிள்ளி கூறுவது (பாடல் 75)", "வேலொடு நின்றான் இடுவென்றது போலும் கோலொடு நின்றான் இரவு (குறள் - 552)" என்ற குறளோடு ஒத்திருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

**"மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்**
**பால்தர வந்த பழவிறல் தாயம்**
**எய்தினம் ஆயின் எய்தினம் சிறப்புஎன**
**குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்**
**சிறியோன் பெறின்அது சிறந்தன்று மன்னே''** (75)

என்பதாக அமைகிறது.

இவ்வாறாக புறநானூறு என்பது தமிழர்களின் வாழ்வியல் களஞ்சியம். அதில் உள்ள நானூறு பாடல்களும் பொருள் பொதிந்தவையே. அதில் பொதுவியல்திணை பொருண்மொழிக் காஞ்சித் துறைப்பாடல்கள் புறத்திணைகள் ஒன்பதிலும் வகைப்படுத்த முடியாத பொதுவான செய்திகள் உள்ளன. இப்பொதுவியல்திணை அறம் கூறும் பாடல்களையும் அறிவு கூறும் பாடல்களையும் உள்ளடக்கியது. மன்னன் முதல் சாதாரண மக்கள் வரை வழிப்படுத்துகிறது. மற்றவர்களுக்கு தொல்லைதராமல் இருத்தல், இவ்வுலகம் அனைவருக்கும் சொந்தமானது. கல்வியின் சிறப்பு, குழந்தைச்செல்வம், நட்பு, ஈகை எனவும், மன்னர்களுக்கான அறிவுரைகளான நல்லாட்சி செய்தல், அதிக வரிவசூல் செய்யாமல் இருத்தல், நன்மை செய்ய முயலுதல் போன்ற பல அறங்களையும் வலியுறுத்துகிறது. இவைகளெல்லாம் நம் முன்னோர்களாம் மூத்தகுடி தமிழ்க்குடி பின்பற்றியவை. அதனால்தான் சங்ககாலத்தைப் பொற்காலம் என்கிறார்கள். மனிதனிடம் இருக்கவேண்டிய அனைத்து நற்பண்புகளையும் வலியுறுத்துகின்றன. இவற்றை நம் வாழ்வில் கடைபிடித்து மகிழ்வோம், மகிழ்விப்போம்.